**STC.No. 380 /2022**

அ.சா. 1 சித்ரவேல்
த/பெ. ராக்கப்பன்
07.03.2026

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

1. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களைதான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். சண்டை நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் இடையே 3 கிமீதூரம் இருக்கும். நரிக்குடி பேருந்து நிலையத்தில் இருந்துதான் திருச்சுழி அரசு மருத்துவமனைக்கும், நரிக்குடி அரசு மருத்துவமனைக்கும் செல்ல முடியும் என்றால் சரிதான். நரிக்குடி பேருந்து நிலையத்தின் அருகில்தான் நரிக்குடி காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். யார் யார் அடித்தார்கள் என்ற விபரத்தை அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு நரிக்குடி காவல் நிலையம் சென்று சொன்னேனா என்றால் நரிக்குடி காவல் நிலையம் சென்று சொன்னேன், அவர்கள் மருத்துவமனை செல்ல அறிவுறுத்தினார்கள். காவல் நிலையத்தில் மெடிக்கல் மெமோ கொடுத்தார்களா என்றால் இல்லை. நரிக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் அப்போது 1வது எதிரி ஜெகநாதன் அங்கு இருந்ததால் திருச்சுழி மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். திருச்சுழி அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் எத்தனை நபர்கள் அடித்தார்கள் என்று சொன்னேனா என்றால் நான் சொல்லவில்லை, என்னை சிகிச்சைக்கு அனுமதித்தார்கள்.

2. எனது ஊரில் எங்களுக்கும் எதிரிகளுக்கும் இடப்பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அது தொடர்பாக இந்த நீதிமன்றத்தில் வழக்கு அசல் வழக்கு எண்.216/2021 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

முதல் விசாரணையில் சின்னகருப்பி கம்பை வைத்து என்னை முதுகில் அடித்தார் நான் கீழே விழுந்துவிட்டேன் தகரத்தை பிரிக்கச் சொன்னார்கள் என்ற விபரத்தை எனது புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். இடது காலில் உள்ள பெருவிரலில் உள்ள நகத்தை கத்தியை வைத்து அறுத்தார்கள் என்பதை புகாரிலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. முதல் விசாரணையில் சம்பவமானது நரிக்குடி பேருந்து நிலையத்திற்கு நான் வரும்போது வழியில் மறித்து எதிரிகள் அடித்தார்கள் என்பதை புகாரில் தெரிவித்துள்ளேனா என்றால் ஆமாம்.

3. நான் கொடுத்த புகார் மனு என்னால் கைப்பட எழுதப்பட்டது என்றால் சரிதான். சாட்சியிடம் புகார் மனுவினை கொடுத்து காண்பித்தபோது நரிக்குடி வரும் வழியில் தன்னை எதிரிகள் வழிமறித்து அடித்தார்கள் என்ற விபரம் குறிப்பிடவில்லை என்று தெரிவிக்கிறார். மாரியம்மாள் தம்பிகள் பூவலிங்கம், ராமச்சந்திரன் ஆகியோர் தன்னை அடித்ததாக புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் நான் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் போலிசார் எழுதி என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள். புகாரினை போலிசார் எழுதியதால் அதில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் மட்டும் செய்தேன். சண்டை நடந்ததா என்று ஊர்மக்களை கேட்டால் உண்மை விபரம் தெரியவருமா என்றால் ஊர்க்காரர்கள் அனைவரும் எதிரிகளுக்கு சாதகமானவர்கள்.

4. ஜெகநாதன் மீது நரிக்குடி காவல் நிலையத்தில் எத்தனை புகார் மனுக்கள் கொடுத்திருப்பேன் என்றால் இந்த புகாரையும் சேர்த்து இரண்டு புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளது. வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியருக்கு இடப்பிரச்சனை சம்பந்தமாக ஜெகநாதன் மீது எத்தனை மனுக்கள்

கொடுத்திருப்பேன் என்றால் நிறைய மனுக்கள் கொடுத்திருப்பேன். சண்டை நடந்த சமயத்தில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் எனது மனைவி, எனது மகள் இருந்தார் மற்றவர்கள் யாரும் இல்லை. வழக்கு சம்பந்தமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபிறகு போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. நான் சொல்வதுபோல் சொன்ன நாள், நேரத்தில் எதிரிகள் என்னை அசிங்கமாக பேசவோ, அடிக்கவோ இல்லை என்றால் சரியல்ல. இடப்பிரச்சனையை மனதில் வைத்து கொண்டு அவர்கள் மீது பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் 2, 3 எதிரிகள் இல்லை என்றாலும் வழக்கிற்காக அவர்களை இருந்தார்கள் என்று மிகைப்படுத்தி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.